## கண்டி எசல பெரஹர நம்பிக்கைப் பொறுப்பு - 2014

கண்டி எசல பெரஹர நம்பிக்கைப் பொறுப்பின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1980 இன் 34 ஆம் இலக்க கண்டி எசல பெரஹர பொறுப்பாண்மை அதிகாரச்சட்டத்தின் 16(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு ஏற்றவகையில் அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நம்பிக்கைப்பொறுப்பின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நம்பிக்கைப்பொறுப்பின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கண்டி எசல பெரஹர நம்பிக்கைப் பொறுப்பின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) ஐந்தொகையில் நிரூபணமாகாத ரூபா 73,500 கிரயத்திலான யானைத் தடாகம் மற்றும் அதற்கு அண்மித்த காணி எசல பெரஹரவின் நம்பிக்கைப் பொறுப்பிற்குரியதாக உரித்துச் சான்றிதழ் காணப்படவில்லை.

(ஆ) சிறந்த 09 கலைஞர்களுக்கு சனாதிபதி விருது பரிசாக ரூபா 45,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அப்பணத்தை குறித்த நபர்கள் பெற்றுக்கொண்டமைக்கான சான்றுகள் காணப்படவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பனவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1980 இன் 34 ஆம் இலக்க கண்டி எசல பெரஹர நம்பிக்கைப் பொறுப்பு அதிகாரச்சட்டம் | |
| (i) 8(1) ஆம் பிரிவு | ஸ்ரீ தலதா மாளிகையின் தியவடன நிலமே, கண்டி சுற்றுப்புற தேவாலயங்களின் பஸ்நாயக்க நிலமே கண்டி நிருவாக மாவட்டத்தின் மாவட்டச்செயலாளர் மற்றும் சனாதிபதியால் நியமனம் செய்யப்படுகின்ற மூன்று உறுப்பினர்களுடன் கூடிய மதியுரைக் குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 16(3) ஆம் பிரிவு | நம்பிக்கைப் பொறுப்பின் நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை நம்பிக்கைப் பொறுப்பினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (iii) 19(2) மற்றும் 19(3) ஆம் பிரிவுகள் | அனுமதிப்பத்திரத்திற்காக அங்கீகாரம் வழங்கும் போது உத்தேச கட்டணம் அல்லது அறவீடுகள் அதிகம் அல்லது அசாதாரணம் என்பது தொடர்பில் சரியான உறுதிப்படுத்த லொன்றில்லாமல் எசல நம்பிக்கை பொறுப்பினால் அங்கீகாரம் |

---

| | |
|---|---|
| | வழங்கியமையால் சில நிறுவனங்கள் 70 அமெ.டொலர் முதல் 85 அமெ.டொலர் வரையான அதிக விலைகளில் வெளிநாட்டவர்களுக்கு ஆசனங்களை வழங்கியிருந்தது. |
| (iv) 20 ஆம் பிரிவு | 19(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆசனங்களை வழங்குவதற்காக அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கு அனுமதியை கோரும் போது அவ்விண்ணப்பபத்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஆசனங்களின் அளவை மிகைத்து அனுமதியின்றி விதிக்கப்பட்ட ஆசனங்களிலிருந்து பெரஹர நம்பிக்கைப் பொறுப்பினால் ரூபா 1,746,050 ஆன வருமானமொன்று சேகரிக்கப்பட்டிருந்தது. எனினும் அனுமதியில்லாமல் பெரஹரவைப் பார்வையிடுவதற்காக ஆசனங்களை வழங்கிய அந்நபர்கள் தொடர்பாகவும் அனுமதியொன்றில்லாமல் வாவியின் சுவரின் மேல் பல்வேறு நிறுவனங்கள் பெரஹரவைப் பார்வையிடுவதற்காக ஆசனங்களை வழங்குவது தொடர்பாக அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நிதிப் பிரமாணம் 384 | நம்பிக்கைப் பொறுப்பினால் மீளாய்வாண்டில் ரூபா 9,160,421 பெறுமதியான 225 காசோலைகள் குறுக்கு கோடிடாமல் திறந்த காசோலையாக வழங்கப்பட்டிருந்ததுடன், காசோலை பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 396 | வழங்கப்பட்ட போதிலும், வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்கள் கடந்த ரூபா 20,000 பெறுமதியான 03 காசோலைகள் தொடர்பாக 2015 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையிலும் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப் பிரமாணம் 756 | மீளாய்வாண்டிற்கான பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2006 திசம்பர் 22 ஆம் திகதிய PF/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04.1 ஆம் பந்தி | நிதியத்தின் நோக்கங்களிற்கு இணங்க தயாரிக்கப்பட்ட வருடாந்த பாதீடு அதன் நிர்வாக அதிகாரி மற்றும் அமைச்சின் செயலாளரால் அதற்கு முன்னைய ஆண்டின் செப்தெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் உரிய கௌரவ அமைச்சருக்கு சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டு செப்தெம்பர் 30 ஆந் திகதிக்கு முன்னர் தேசிய வரவு செலவு திட்ட பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட பாதீடு அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 3 நிதி மீளாய்வு

### 3.1. நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கண்டி எசல பெரஹர நம்பிக்கைப் பொறுப்பின் நிதி விளைவுகள் ரூபா 1,805,456 மிகையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 753,631 ஆக இருந்தமையால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 1,051,825 தொகையான அதிகரிப்பொன்று தென்பட்டது.

## 4 செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டில் பெரஹரவை பார்வையிடுவதற்காக இராணி ஹோட்டலின் விறாந்தையை குத்தகைக்கு வழங்கி கண்டி மாநகர சபை ரூபா 5,317,500 ஆன வாடகை வருமானமொன்று உழைக்கப்பட்டிருந்ததுடன், 2013 யூலை 12 ஆந் திகதி நம்பிக்கை பொறுப்பு தொடர்பாக நடைபெற்ற கூட்ட அறிக்கை மூலம் 2013 ஆம் ஆண்டில் நகர சபை வருமானத்தில் 20 சதவீதமான அளவு அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், 2014 ஆம் ஆண்டு தொடர்பாக அவ்வாறான தீர்மானமொன்று மேற்கெள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இராணி ஹோட்டலின் விறாந்தையை வாடகைக்கு வழங்கும் போது வாடகைக்கு எடுத்தவரால் பெரஹரவை பார்வையிடுவதற்காக வழங்குவதற்கு அச்சிடப்படுகின்ற அனைத்து அனுமதிச்சீட்டுக்களையும் கங்கவட்ட கோரளை பிரதேச செயலகத்திற்கு சமர்ப்பித்து முத்திரையிடப்பட்டு 25 சதவீதக் கட்டணமொன்று பெரஹர நம்பிக்கைப் பொறுப்பிற்கு செலுத்தி உரிய அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ள வேண்டுமென வாடகை நிபந்தனையொன்று மாநகர சபையால் விதிக்கப்பட்டிருந்த போதிலும் அந்நிபந்தனையின் பிரகாரம் குறித்த வருமானத்தை பெரஹர நம்பிக்கைப் பொறுப்பிற்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமை காரணமாக அனுமதியைப் பெற்று ஆசனங்களை வழங்கியதன் அடிப்படையில் வெளித்தரப்பினரால் 05 நாட்களுக்காக உழைக்கப்பட்டிருந்த ரூபா 24,507,563 ஆன தொகையில் 25 சதவீதமான ரூபா 6,126,891 ஆன வருமானமொன்று நம்பிக்கைப் பொறுப்பிற்கு இழக்கப்பட்டிருந்தது.

(இ) பெரஹரவை பார்வையிடுவதற்காக இராணி ஹோட்டலின் ஆசனங்களை வழங்கி ரூபா 28,159,250 தொகை மாத்திரம் நகர சபை மற்றும் வெளித்தரப்பினருக்கு குத்தகைக்கு வழங்கி உழைத்திருந்ததுடன், பெரஹர நம்பிக்கைப் பொறுப்பின் திரட்டிய வருமானம் ரூபா 7,164,250 ஆக இருந்தது. இது வெளித்தரப்பினரின் உழைப்புகளின் சிறிய சதவீதமொன்றாகும்.

### 4.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பொது நம்பிக்கையாளர் பொறுப்பில் காணப்பட்ட ரூபா 20,000,000 தொகையான முதலீட்டு தொகைக்கு பொது நம்பிக்கை பொறுப்பாளரிடமிருந்து மீளாய்வாண்டிற்கு கிடைக்க வேண்டிய ரூபா 1,700,000 ஆன வட்டியிலிருந்து 4 சதவீதம் வருமான கட்டணமாக நிறுத்தி வைத்ததன் காரணமாக ரூபா 68,000 தொகை நம்பிக்கைப் பொறுப்பிற்கு கிடைக்காமல் போயிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 சுற்றாடல் மற்றும் சமூக பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

கண்டி மாநகர சபை மற்றும் வேறு பல்வேறு நிறுவனங்கள் எசல பெரஹரவைப் பார்வையிடுவதற்காக நம்பிக்கைப் பொறுப்பின் அனுமதியொன்று இல்லாமல் ஆசனங்களை வழங்கியமையால் பொது மக்களுக்கு தலதா பெரஹரவை சுதந்திரமாக பார்வையிடுவதற்கு உள்ள சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக பெரஹர நம்பிக்கைப் பொறுப்பினால் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஆ) செலவினங்களை மேற்கொள்ளலும் வருமானத்தை சேகரித்தலும்
(இ) முதலீடு